Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 16, 2024

வியாழக்கிழமை மே 16, 2024 | ஒளி: 09 கதிர்: 253 | பக்கம்:06 | நகரப்பதிப்பு ★ FREE

# O/L விஞ்ஞானத்துக்கு 2 புள்ளிகள் இலவசம்




நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் விஞ்ஞான வினாக்கள் இரண்டுக்கு இரண்டு இலவச புள்ளிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஆந்த் ஜயசுந்தர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# “திருடர்களைப் பிடிக்க புதிய சட்டம்”

அரசாங்கம் திருடர்களைப் பாதுகாப்பதாக சிலர் குற்றம் சுமத்தினாலும் திருடர்களைப் பிடிப்பதற்காக அரசாங்கம் பல புதிய சட்டங்களைக் கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

‘ஊழலை ஒழிப்போம்’ என்பதை அரசியல் கோஷமாகப் பயன்படுத்துவதைக் கைவிட்டு, புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதியைப் புதன்கிழமை (15) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “ஆள் கடத்தலுக்கு அதிகபட்ச தண்டனை”



- ஆள் கடத்தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்
- அதிக சம்பளம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இந்த ஆள் கடத்தலில் பலர் சிக்கி உள்ளனர்
- 55 வயதின் பின்னர் அவர்களுக்கு சம்பளமோ அல்லது ஓய்வூதியமோ வழங்கப்படாதது குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது

ஆள் கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகத் தராதரம் பாராமல் சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் வலியுறுத்தினார்.

ரஷ்ய உக்ரைன் போருக்கு ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை கூலிப்படையாகப் பயன்படுத்தி ஆள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதிக்கு பலம் சேர்க்க புதிய அரசியல் கூட்டணி



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவை வழங்கும் வகையிலான புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் இரண்டு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பேச்சுவார்த்தை மாதிவெலயில் உள்ள விருந்தகம் ஒன்றில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்றுள்ளது. இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அணியும், பாராளுமன்ற உறுப்பினர் நிமல்லான்சாவின் புதிய கூட்டணி பிரதிநிதிகளும் பங்குபற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்க தடை உத்தரவு

கீத்,பாறுக் ஷிஹான், வி.ரி.சகாதேவராஜா



முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வு செய்யக்கூடாது என கூறி, ஐந்து பேருக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பிலான நீதிமன்ற கட்டளையை பெரிய நீலாவணை பொலிஸார், புதன்கிழமை (15) கையளித்துள்ளனர்.

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீவனின் வீட்டுக்கு புதன்கிழமை (15) காலை 07.30 மணியளவில் சென்றிருந்த பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினரே இவ்வாறு நீதிமன்ற கட்டளையை கையளித்துள்ளனர்.

பொலிஸ் வாகனத்தில் வந்த பொலிஸார், “முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வு செய்யக்கூடாது. அது பயங்கரவாதிகளுக்கான நினைவு நாள். நீதிமன்ற கட்டளையை மீறிச் செயற்பட்டால் கைது செய்வோம்” என்றும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2


# மூதூர் கைதுக்கு கண்டனம்

அ.அச்சுதன்

திருகோணமலை-மூதூரிலுள்ள சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சி அளிக்கின்றது என

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின், தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் கட்டணத்தை வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# சிசுவை விட்டுச்சென்ற மாணவி மாட்டினார்

எம்.றொசாந்த்

யாழ்.போதனா வைத்தியசாலையில் சனிக்கிழமை (11) சிசுவைப் பிரசவித்த பின்னர், சிசுவை வைத்தியசாலையிலேயே கைவிட்டுச் சென்ற பாடசாலை மாணவியான 15 வயது சிறுமியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் , மாணவியை வன்புணர்ந்து கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் 25 வயதான இளைஞனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 15 வயதான பாடசாலை மாணவி பிரசவத்திற்காகக் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டிருந்தார். தாயாரும் மாணவிக்கு உதவியாகத் தாயாரும் நின்றுள்ளார். மாணவிக்குக் குழந்தை பிறந்ததும் மறுநாள், தாயும் மாணவியும் குழந்தையை வைத்தியசாலையில் கைவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

# வெளிநாட்டில் இருந்து வங்கியில் வைப்பிலிட்ட ரூ.13 இலட்சம் மாயம்

எஸ்.கிருஸ்ணா



குவைட்டில் இரண்டு வருடங்களாக பணிப்பெண்ணாக பணியாற்றிவிட்டு அரச வங்கியில் வைப்பிலிட்ட சுமார் 1,344, 000 (பதின்மூன்று இலட்சத்து நாற்பத்து நான்காயிரம்) ரூபாய் பணம் மாயமான சம்பவம் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு உரிய வங்கிக்கணக்கில் இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவை, பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்பட கீழ் பிரிவைச் சேர்ந்த நித்தியஜோதியம்மா சுந்தரலிங்கம் என்பவருக்குச் சொந்தமான பணமே இவ்வாறு மாயமாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தொடர்ச்சி P2

# சா/த பரீட்சை நிறைவடைந்தது

2023/2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள், மே.6ஆம் திகதி ஆரம்பமாகி, ஞாயிற்றுக்கிழமை (12) தவிர்த்து, கடந்த 9 நாட்கள் நடைபெற்றன. இறுதி பரீட்சை, புதன்கிழமை (15) நடைபெற்றது.

பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் எவ்விதமான கேளிக்கைகளில் ஈடுபடாமல், தங்களுடைய வீடுகளுக்குச் செல்லுமாறு பொலிஸார் ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தனர்.

தொடர்ச்சி P2



# சு.கவின் பதில் தவிசாளருக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு

## ஆட்சேபனைகளை எதிர்வரும் 27ஆம் திகதி முன்வைக்குமாறு பணிப்பு


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் பதில் பிரதான செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த ஆகியோருக்கு பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு எதிர்வரும் 27ஆம் திகதி வரை புதன்கிழமை (15) நீடிக்கப்பட்டுள்ளது.

பதில் பிரதான செயலாளர் மற்றும் பதில் தவிசாளர் ஆகியோரின் தீர்மானங்களைச் செயற்படுத்தல் அல்லது அமுல்படுத்துவதை தடைசெய்து பிறப்பிக்கப்பட்ட இடைக்கால கட்டளை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

# 100 மில்லிமீற்றர் மழை பெய்யும்



இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக மழையுடனான வானிலை மேலும் தொடருமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரையிலான பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதிக்கு பலம்...

இந்த உரையாடலில் இரண்டு தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபது பேர் வரை கலந்து கொண்டுள்ளனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், புதிய கூட்டணியை அறிமுகம் செய்யும் நோக்கில், ஹம்பாந்தோட்டையில் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் இதன்போது செய்யப்பட்டுள்ளன.

# O/L விஞ்ஞானத்துக்கு...

விஞ்ஞானப் பாடத்தின் 9 மற்றும் 39 ஆகிய வினாக்களுக்கே இலவசமாக இரண்டு புள்ளிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

கல்விப் பொதுத் தரப் பரீட்சையின் விஞ்ஞான வினாத்தாள், ஒதுக்கீட்டுத் திட்டத்திற்குப் புறம்பாகத் தயாரிக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி...

நீதிமன்ற கட்டளை என கூறி நீதிமன்ற கட்டளை ஒன்றையும் வழங்கியிருந்ததோடு, பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தைச் சூழவும் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்,

அந்த கட்டளையில், நீதவான் நீதிமன்றம் கல்முனை என்று ஒருவருடைய கையெழுத்தும் இருக்கிறது. ஆனால், எந்த நீதிமன்றத்திற்குமான இறப்பர் முத்திரை அதிலே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தாமோதரம் பிரதீவன், புஷ்பராஜ் துஷானந்தன், விநாயகம் விமலநாதன், தம்பிராசா செல்வராணி மற்றும் கிறிஸ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோருக்கே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்ட அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணியை செவ்வாய்க்கிழமை (14) கைதுசெய்ய முயற்சித்திருந்ததோடு, சமூக செயற்பாட்டாளர் பு.துஷானந்தனுக்கு நீதிமன்ற தடையுத்தரவும் வழங்கப்பட்டிருந்தது.

# 100 மில்லிமீற்றர் மழை...

மேல் மற்றும் தென் மாகாண கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 20, 30 கிலோ மீற்றர் வேகத்தில் தென்மேற்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# சா/த பரீட்சை நிறைவடைந்தது

அத்துடன், தங்களுடைய பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் செல்வதற்கு சமூகமளிக்குமாறு சில பாடசாலைகளின் நிர்வாகத்தின் ஊடாக கடிதம் பெற்றோருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

எனினும், நகர்ப்புறங்களில் உள்ள சில பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் சிலர், பாடசாலை சீருடையில் சாயம்பூசி, மாக்கர் பேனைகளில் எழுதி, மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் புதன்கிழமை (15) ஈடுபட்டிருந்தமையை தலைநகரில் அவதானிக்க முடிந்தது.

# “ஆள் கடத்தலுக்கு அதிகபட்ச தண்டனை”

“ரஷ்ய-உக்ரைன் போரில் தொடர்புபட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. கடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பாதுகாப்புப் பிரதானிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆள் கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு, எதிராகத் தராதரம் பாராமல், சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்பதை முதலில் வலியுறுத்த வேண்டும். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக சுமார் 288 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆள் கடத்தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆள் கடத்தல் குறித்து சமூக வலைத்தளங்கள் மூலம் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதிக சம்பளம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இந்த ஆள் கடத்தலில் பலர் சிக்கி உள்ளனர். எனவே, இந்த ஏமாற்று முயற்சிகளில் பொதுமக்கள் சிக்கிக்கொள்ள வேண்டாம் என அரசாங்கம் கேட்டுக்கொள்கிறது. இந்த ஆள் கடத்தல் தொடர்பில் மேலதிக தகவல்கள் தெரிந்தால் 0112 - 401 146 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு கோருகிறோம்.

அத்துடன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி முற்றாக அங்கவீனமடைந்த அல்லது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயது வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 55 வயதின் பின்னர் அவர்களுக்கு சம்பளமோ அல்லது ஓய்வூதியமோ வழங்கப்படாதது குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. முப்படைகளுக்கு மட்டும் வழங்கப்பட்ட இந்த சலுகை சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். எனவே, இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், சட்டப்பூர்வமாக இராணுவத்தை விட்டு வெளியேறாமல் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களுக்குப் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலம் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. தற்போது பொது மன்னிப்புக்காக சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357 ஆகக் காணப்பட்டது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் சேவையிலிருந்து விலகி மீண்டும் பணிக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 799 என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இராணுவ வீரர்களுக்கான காணிகளை விரைவாக வழங்குவதற்கும் சலுகைகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் விசேட குழுவொன்றை அமைத்துள்ளார். உறுமய வேலைத்திட்டத்துடன் ஒரே நேரத்தில் இடம்பெறும் இந்தப் பணிகளுக்குக் காணி அமைச்சும் அதிக பங்களிப்பை வழங்கியுள்ளது. இது இராணுவ வீரர்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட தனித்துவமான நடவடிக்கை என்பதைக் குறிப்பிட வேண்டும்” என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# சு.கவின் பதில் தவிசாளருக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க மற்றும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் விவசாய அமைச்சருமான மஹிந்த அமரவீர ஆகியோர் தாக்கல் செய்த வழக்கைப் பரிசீலித்தபோதே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதிவாதிகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால, பதில் தலைவர் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நீதி அமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ கட்சியின் பிரதித் தலைவர் திலங்க சுமதிபால ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தடை உத்தரவுக்கு எதிரான பிரதிவாதியின் ஆட்சேபனைகளை எதிர்வரும் 27ஆம் திகதி முன்வைக்குமாறும் நீதியரசர் பணித்தார்.

# மூதூர் கைதுக்கு கண்டனம்

நினைவு கூரல் என்பது ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமையாகும். உலகளாவிய அனைத்து சர்வதேச சட்டங்களும் அதனை ஆழமாக வலியுறுத்துகின்றன. இந்நிலையில் திருகோணமலை சேனையூரில் நடைபெற்றுள்ள இச்சம்பவம் மிகுந்த வேதனையை ஒட்டுமொத்த தமிழ் மக்களிற்கும் ஏற்படுத்தி உள்ளது என்றும் கட்டண அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொல்லொணாத்துயர் வலி சுமந்த இந்த நாட்களில் தங்கள் உறவுகளை நினைந்து பிரார்த்திப்பதற்கு அந்த நாட்களில் அவர்கள் பட்ட துயரத்தைக் கஞ்சி பருகி உயிரைப் பிடித்திருந்த அவலத்தை நீள நினைந்து தாமும் கஞ்சி காய்ச்சி குடிப்பதும் பரிமாறுவதும் குற்றமாக அரச இயந்திரத்தால் பார்க்கப்படுவது இலங்கையில் 15 ஆண்டுகளாகியும் பேரினவாத மனநிலையில் மாற்றம் வராத கொடூர முகத்தின் வெளிப்பாடாகும். இது தொடர்ந்தும் இனங்களிற்கு இடையேயான நல்லெண்ணத்தை ஆழமாகப் பாதிக்கும் செயற்பாடாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புனிதமான கோவிலில் உறவுகளை நினைந்து கஞ்சி காய்ச்சிய பெண் பிள்ளைகள் உள்ளிட்டோரை அராஜகமாகக் கைது செய்த செயல் மிகுந்த கண்டனத்துக்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளது.

> இலங்கையில் 15 ஆண்டுகளாகியும் பேரினவாத மனநிலையில் மாற்றம் வராத கொடூர முகத்தின் வெளிப்பாடாகும்

இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஒருமித்து பாரிய எதிர்ப்பை வெளிக்காட்டி அரசாங்கத்தின் கோர முகத்தை துகிலுரித்து அப்பாவிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியம் பரப்பில் வாழும் மூத்த தலைவர் திருகோணமலையை தற்போதும் பிரதிநிதித்துவப்படுத்தும் சம்பந்தனின் மாவட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதும் பிணை கூட வழங்கப்படாமல் பெண்பிள்ளைகள் உள்ளிட்டோர் விளக்கமறியலில் இரு வாரம் வைக்கப்பட்டிருப்பதும் மனதை வருத்துகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து தமிழ்த் தேசிய சக்திகளும் இவர்களின் விடுதலைக்குச் சகல எத்தனங்களை உடனடியாக செய்ய வேண்டுவதுடன், அனைத்து முற்போக்கு மற்றும் உலகளாவிய சக்திகளதும் கவனத்தை ஈர்த்து அரசாங்கத்துக்கு அழுத்தத்தைப் பிரயோகித்து நினைவுகூரலுக்கான உரிமையை உறுதிப்படுத்துமாறும் வலிசுமந்த இந்த நாட்களில் உங்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றோம் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டில் இருந்து வங்கியில்...

குடும்ப வறுமை காரணமாக 2022 ஆம் ஆண்டு வெளிநாட்டிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக வேலைக்குச் சென்ற இப்பெண் (நித்தியஜோதியம்மா சுந்தரலிங்கம்) , தனது மாதாந்த சம்பளத்தை அரச வங்கியொன்றில் வைப்பு செய்துள்ளார்.

இரண்டு வருடங்கள் வெளிநாட்டில் வேலை செய்து விட்டு 2024 ஏப்ரல் 28 ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார். இரண்டு நாட்கள் கழித்து ஏப்ரல் 30 ஆம் திகதியன்று குறித்த வங்கிக்குச் சென்று பணத்தை மீளப்பெறுவதற்கான சிலிப்பை நிரப்பிக் கொடுத்துள்ளார்.

சிலிப்பில் எழுதப்பட்டுள்ள பெருந்தொகை பணம், கணக்கில் மீதமில்லை என்றும், வங்கிக்கணக்கில் 1,046 ரூபாய் மாத்திரமே இருப்பதாக கரும பீடத்தில் கடமையிலிருந்த வங்கி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடங்களாக வீட்டு வேலைச் செய்து சம்பளமாகக் கிடைத்த 13 இலட்சத்து 44 ஆயிரத்து 859 ரூபாய் பணம் வங்கிக் கணக்கிலிருந்து சிறுச்சிறுக மீளப் பெற்றுள்ளதாக வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நான், வெளிநாட்டில் இருக்கும் போது, இங்குப் பணத்தை என்னால் எவ்வாறு எடுக்க முடியும்? என குறித்த பெண், வங்கி அதிகாரிகளுடன் முரண்பட்டுள்ளார். தனக்கு உரிய பதில் கிடைக்காமையால், ஹட்டன் நகரில் பேருந்தில் பாய்ந்து தன்னுயிரை மாய்க்கவும் முயன்றுள்ளார்.

எனினும், அப்பெண்ணை காப்பாற்றியவர்கள் விடயத்தைக் கேள்வியுற்று, ஹட்டன் குற்றத்தடுப்பு பொலிஸ் விசாரணை பிரிவுக்கு அனுப்பி வைத்துள்ளனர். அங்கு அப்பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது வங்கிக்கணக்கு விபரங்களைக் குறித்த வங்கியிலிருந்து பெற்று பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். அதற்காக, அந்த வங்கிக்கு 2,400 ரூபாயைக் கட்டணமாகச் செலுத்தியும் உள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், வங்கியின் சிசிரிவி கமெரா காணொளியில் குறித்த பெண்மணியின் சாயலை ஒத்த பெண்ணொருவர் பணத்தை மீளப்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், நித்தியஜோதியம்மா வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முன்னர், தனது அயல் வீட்டுப் பெண்ணிடம் தனது தேசிய அடையாள அட்டையையும், வங்கி புத்தகத்தையும் ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளார்.

நாட்டுக்குத் திரும்பியதன் பின்னர், அவ்விரண்டு ஆவணங்களையும் குறித்த பெண்ணிடம் கேட்ட போது ஆள் அடையாள அட்டையை மாத்திரம் திரும்பக் கொடுத்த அயல்வீட்டுப் பெண், வங்கிப்புத்தகம் காணாமற் போய்விட்டதாகத் தெரிவித்தும் உள்ளார்.

இந்நிலையில், குறித்த பெண்மணியே ஆள் மாறாட்டம் செய்து குறித்த வங்கிக்கணக்கிலிருந்து பணத்தை மீளப் பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அத்துடன், நாவலப்பிட்டி, டிக்கோயா, ஹட்டன் பகுதிகளிலுள்ள வங்கிக் கிளைகளிலேயே பணத்தை மீளப்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய வங்கியின் அதிகாரியொருவர் இது குறித்துத் தெரிவிக்கையில், நித்தியஜோதியம்மா என்பவரின் ஆள் அடையாள அட்டையில், படம் தெளிவில்லை. அடையாள அட்டையிலுள்ள படத்தின் சாயலைக் கொண்ட பெண்ணொருவர் வங்கிக்கணக்கு புத்தகத்தில் இட்டுள்ளவாறே கையொப்பமிட்டு பணம் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

குடும்ப வறுமை காரணமாக வெளிநாட்டுக்குச் சென்று, கஷ்டப்பட்டு சிறுகசிறுக சேமித்த பணத்தை, சரியான ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தாமல், வங்கி அதிகாரிகள் வேறு ஒருவரிடம் அதிகாரிகள் எப்படிக் கொடுக்க முடியுமெனக் கேள்வியெழுப்பிய நித்தியஜோதியமா,

எனது வங்கிக்கணக்கில் வைப்பிலிட்ட பணம் முழுவதும் தனக்கு வேண்டுமெனக் கோரியுள்ளார்.

முறைப்பாடு தொடர்பில், ஹட்டன் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், ஆள் அடையாள அட்டை மற்றும் வங்கிப்புத்தகத்தை கையளித்த அயல் வீட்டுப்பெண்ணிடமும் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

# “திருடர்களைப் பிடிக்க புதிய சட்டம்”

ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தை அமுல்படுத்துவதில் தங்கியுள்ளது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஒரு நாடு என்ற சர்வதேச அங்கீகாரம் சட்ட கட்டமைப்பின் செயற்பாட்டில் அடங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்தின் காரணமாக தெல்தெனிய நகரிலிருந்த பழைய தெல்தெனிய நீதவான் நீதிமன்றம் நீரில் மூழ்கியது. அடுத்து தெல்தெனிய கரலியத்த புதிய நகர நிர்மாணத்தின் போது தெல்தெனிய நீதிமன்ற கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டது. இந்த இடத்தில் நீதி அமைச்சினால் இந்த புதிய நீதிமன்ற வளாகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

“ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, சட்டத் துறையில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் 75 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில பாராளுமன்றங்கள் 04 அல்லது 05 வருடங்கள் செயற்பட்ட போதிலும் இந்த அளவு சட்டங்களை நிறைவேற்றியதில்லை.

அரசாங்கம் அதன் பணிகளைச் செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை உருவாக்கப் பாராளுமன்றத்திற்கு வர வேண்டும். அதன்படி புதிய சட்டங்களை நிறைவேற்றி புதிய சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

மேலும், சட்டத்தின் தாமதம் குறித்தும் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். உரிய நேரத்தில் சட்டம் செயற்படுத்தப்படுத்துவதே எம் முன்பிருக்கும் சவாலாகும். வழக்கு விசாரணைகள் திறம்பட நடத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் பெருமளவில் வழக்குகள் புதிதாகத் தாக்கல் செய்யப்படும்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு சொத்துக்களை அழித்தால் அங்கே சட்டமே இருக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சிசுவை விட்டுச்சென்ற மாணவி மாட்டினார்

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சிறுமி நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்தவர் என கண்டறிந்து , அது தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் , குழந்தையைப் பிரசவித்த மாணவியையும் , அவரது தாயாரையும் கண்டறிந்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் , மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்தி, கர்ப்பமாக்கிய மல்லாவி பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# "தமிழ் கைதி மீது சிறை அதிகாரிகள் தாக்குதல்"

## கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு; நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வெலிக்கடை சிறையில் 10 நாட்களுக்கு மேலாக உண்ணாவிரதமிருந்து வந்த முன்னாள் போராளி, எனது வேண்டுகோளையேற்று உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ள நிலையில், இன்னொரு தமிழ் கைதி சிறை அதிகாரியால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற பலஸ்தீனத்தின் இன்றைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில்,

நான் வெலிக்கடை சிறைச்சாலைக்கு இன்று (நேற்று) சென்று அங்கு கடந்த 10 நாட்களுக்கு மேலாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த முன்னாள் போராளியான அரவிந்தன் என்பவரைச் சந்தித்தேன். அவர் செய்யாத குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரின்



உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்துமாறு நான் கேட்டுக்கொண்டதையேற்று அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளார். அவர் ஒரு நிரபராதி அவரை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

அத்துடன் அங்கு தம்பு குணசேகரம் என்ற 65 வயது முதியவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த 7ஆம் திகதி சிறையில் உள்ள மருந்தகத்துக்கு மருந்து எடுக்கச் சென்றபோது சிறை உத்தயோகத்தர் ஒருவரால் "நீ ஏன் அடிக்கடி மருந்து எடுக்க வருகின்றாய், இங்கு நீ வரக்கூடாது என கூறி கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திங்கட்கிழமை பிரதமர் தலைமையில் நடைபெற்ற பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நான் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக பிரச்சினை தொடர்பில் பேசினேன்.

அது தொடர்பில் ஆராய அமைச்சு செயலாளரை அங்கு அனுப்புவதாகப் பிரதமர் உறுதியளித்தார். எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பிரதமரிடம் கோருகின்றேன்.

இதேவேளை, இலங்கையிலிருந்து பல்லாயிரக்கணக்கான கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகப் பிரேரணை கொண்டுவரும் அளவுக்கு இந்த சபையில் உள்ளவர்களுக்குக் கருணை இருக்கின்றது. ஆனால், இங்கிருந்து 300 கிலோ மீற்றரில் உள்ள தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது இங்குள்ளவர்கள் ஏன் அமைதியாக இருந்தீர்கள். உங்கள் கருணை எங்கே போனது? என கேள்வி எழுப்பியுள்ளார்.

## குமுதினி படுகொலையின் 39ஆவது நினைவேந்தல்

நிதர்ஷன் வினோத்

நெடுந்தீவு- குமுதினி படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல் நிகழ்வானது, நெடுந்தீவு- மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினி படுகொலை நினைவுத் தூபியில் புதன்கிழமை (15) நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டது. மலர் வணக்கம் செலுத்தப்பட்டதன் பின்னர் அஞ்சலி நிகழ்வு உணர் வெளிச்சியுடன் நடைபெற்றுள்ளது.

அத்துடன், பசுந்தீவு ருத்திரன் எழுதிய குமுதினி படுகொலை நினைவுகளைச் சுமந்த "உப்புக் கடலை உரசிய நினைவுகள்" என்ற கவி நூல் வெளியீடும் நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் குமுதினி படகில் நூல் சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் வெளியிட்டு வைக்கப்பட்டது

குமுதினி படகிலிருந்து கடலில் மலர் தூவி உயிழநதவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில், முள்ளிவாய்க்கால் நினைவுகளைச் சுமந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது. உயிரிழந்தவர்களின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன

1985/05/15 இதே போன்ற நாளில் நெடுந்தீவு கடற்பரப்பில் நெடுந்தீவு மாவிலித்துறை முகத்திலிருந்து யாழ். புங்குடுதீவு குறிகாட்டுவான் நோக்கி கடலில் குமுதினி படகில் மக்கள் பயணித்த போது, கடற்படையினரால் 07 மாத பெண் குழந்தை பெண்கள் அடங்கலாக உட்பட 36 பேர் நடுக்கடலில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்

39ஆவது நினைவேந்தல் நிகழ்வில், சிவகுரு ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.பத்திநாதன் மற்றும் மத தலைவர்கள், படுகொலையில் உயிரிழந்தவர்களின் உறவுகள் பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர்.





















## காட்டுயானை தாக்கி விவசாயி மரணம்

எப்.முபாரக்

திருகோணமலை- கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கவெவ பகுதியில் காட்டுயானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்றுள்ளது.


கந்தளாய்-சூரியபுரையச் சேர்ந்த எச்.ஆர்.பொடி மாத்தையா என்ற 74 வயதுடைய விவசாயி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கந்தளாய் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிரிழந்தவரின் வீட்டிலிருந்து துப்பாக்கி, ரவைகள் மீட்பு

பிலியந்தலை பிரதேசத்தில், சுற்றாடல் ஆர்வலராக பணியாற்றிய, தற்போது உயிரிழந்துள்ள ஒருவரின் வீட்டில் இருந்து டி 56 ரகத் துப்பாக்கி, 4 மகசீன்கள், 116 துப்பாக்கி ரவைகள் மற்றும் மோட்டார் ரவையொன்று மீட்கப்பட்டுள்ளதாக கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றாடல் செயற்பாட்டாளரின் மகன் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பிலியந்தலை ஹொாயன வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது,



வீட்டின் இயந்திர அறையில் இருந்து இந்த ஆயுதத் தொகை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த ஆயுதங்கள் அவ் இடத்திற்கு எவ்வாறு வந்தது, இந்த ஆயுதங்களை யாரேனும் இந்த இடத்திற்குக் கொண்டு வந்திருக்க முடியுமா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## "உனக்கு வந்தால் இரத்தம் எனக்கு வந்தால் தக்காளி சட்னியா?"

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போது பாற்சோறு கொடுத்துக் கொண்டாடியவர்கள் இப்போது பலஸ்தீனம் தொடர்பில் கதைப்பது வடிவேலு கூறுவதைப் போன்று உனக்கு வந்தால் இரத்தம் எனக்கு வந்தால் தக்காளி சட்னியா? என்பது போன்றே இருக்கின்றது என்று இராஜங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற பலஸ்தீனத்தில் இன்றைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

இஸ்ரேல் - பலஸ்தீன ஆயுதம் தாங்கியவர்களின் மோதலில் இருதரப்பிலும் அப்பாவி மக்கள் கொல்லப் படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பெறுமதி யான உயிர்கள் கொல்லப் படுவதை நாங்கள் வன்மை யாகக் கண்டிக்கி ன்றோம். பலஸ்தீன மக்களுக்காக இப்போது பல அரசியல்வாதிகள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இதனைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கின்றது. தமிழில் நகைச்சுவை நடிகர் ஒருவரின் நகைச்சுவையொன்று உள்ளது. உங்களுக்கு வந்தால் இரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளி சட்னி என்பதனை போன்றே இருக்கின்றது.

இந்த மாதம் தமிழர்களுக்கு முக்கியமான மாதமாகும். இந்த மாதம் முழுவதும் 2009இல் மரண ஓலங்கள் ஒலித்தன. கொத்துக் கொத்தாக குண்டுகளைப் போட்டு தமிழர்கள் அழிக்கப்பட்டபோது, இந்த நாட்டில் பாற்சோறு வழங்கி, சிங்கக்கொடிகளை ஏற்றி அந்த இன அழிப்பை கொண்டாடியவர்கள், அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அந்த சமூகத்தின் தலைவர்கள் இன்று பலஸ்தீனம் தொடர்பில் கதைப்பது வேடிக்கையாக உள்ளது.சொந்த நாட்டுக்குள் சொந்த சமூகம் அழிக்கப்பட்ட போது கொண்டாடினர்.

2009 மே மாதத்தில் வடக்கில் ஒரு முள்ளிவாய்க்கால் என்றால் கிழக்கில் பல முள்ளிவா ய்க்கல்களை கூற முடியும் என்றார்.



## "பிரச்சினைக்கு சுமந்திரன் எம்.பி. தான் காரணம்"

கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரச்சினைக்கு சுமந்திரன் எம்.பி. தான் காரணம், அவர் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு ஒன்றினால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சி எம்.பியான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற பலஸ்தீனத்தின் இன்றைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ள்ளார்.

மேலும் அவர் பேசுகையில்,

அம்பாறை மாவட்ட அரச அதிபர் தமிழர்களுக்கு எதிரானவர் என்ற கருத்தைக் கடந்த பாராளுமன்ற அமர்வில் பேசிய யாழ் எம்.பியான கஜேந்திரன் முன்வைத்தார். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு எதிராக அவர் செயற்படுவதாகவும் குற்றம்சாட்டினார். அதனை நான் நிராகரிக்கின்றேன்.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் தமிழ்,முஸ்லிம், சிங்களவர் என்ற பேதம் பாராமல் செயற்படும் ஒருவர். அவர் அங்கு சிறந்த சேவையை வழங்குகின்றார். அவர் ஒரு அரச அதிகாரி. சட்டத்துக் குட்பட்டுத்தான் செயற்பட முடியும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கஜேந்திரனுக்கு அம்பாறை மாவட்டம் பற்றியோ கல்முனை பற்றியோ எதுவுமே தெரியாது.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரச்சினைக்கு சுமந்திரன் எம்.பிதான் காரணம். அவர் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு ஒன்றினால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே இதனை ஒரு இனவாத பிரச்சினையாக மாற்ற வேண்டாம் என தெரிவித்துளார்.




## யாழில் தம்பதி கைது

எம்.றொசந்த்

யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பு மையம் ஒன்று பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு, போதைப்பொருள் தயாரிப்பு பொருட்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளதுடன், தம்பதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், வீட்டின் உரிமையாளரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் போது, குறித்த வீட்டின் அறையை ஒரு தம்பதியினருக்கு வாடகைக்கு கொடுத்துள்ள நிலையில், அவர்கள் அந்த அறையில் வசித்து வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த தம்பதியினரில், கணவன் யாழில் இயங்கும் வன்முறை கும்பல் ஒன்றுடன் இணைந்து கடந்த காலங்களில் வன்முறைகளில் ஈடுபட்டு வந்தநிலையில், அவருக்கு எதிராக யாழிலுள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதுடன், தற்போது தான் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதில்லை எனவும் திருந்தி வாழ்வதாகவும் நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது மனைவி யாழில் உள்ள தனியார் மருத்துவ மனை ஒன்றில் தாதியாராக கடமையாற்றி வருவதாக தெரியவந்துள்ளது.

மனைவி ஊடாகவே ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்குத் தேவையான ஆய்வு கூட பொருட்களைப் பெற்று இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.


மேலும் குறித்த தம்பதியினர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வாட்ஸ்அப்பில் தகவல் பகிர்ந்தோர் கைது

விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காகக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கண்காணித்து குற்றவாளிகளுக்கு வாட்ஸ்அப் மூலம் தகவல் தெரிவித்ததாகக் கூறப்படும் இருவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர்கள் கணினி குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு செவ்வாய்க்கிழமை (14) நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெய்யந்தர பிரதேசத்தைச் சேர்ந்த




23 மற்றும் 30 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முள்ளிவாய்க்கால் கஞ்சியும் இடையூறுகளும் தடைகளும்

இந்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு, இன்னும் இரண்டு நாட்களில் அதாவது, மே 18ஆம் திகதியன்று, 15 வருடங்கள் நிறைவடைகின்றன. எனினும், யுத்தத்தின் போதும், அதன் பின்னரும் காணாமலாக்கப்பட்டவர்கள், படைத்தரப்பினரிடம் ஒப்படைக்கப் பட்டவர்களுக்கு என்ன நடந்ததெனத் தெரியாமலே இருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை, நீதி, நியாயம் கிடைக்கவில்லை. தங்களுடைய உறவுகளைத் தேடியலைந்துகொண்டிருக்கும் பலரும் உயிரிழந்துவிட்டனர். எனினும், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டம் இன்றுமே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு பல்வேறான நிவாரணங்களையும் வாக்குறுதிகளையும் அரசாங்கங்கள் அள்ளிவீசினாலும், ஆணைக்குழுக்களை அமைத்தாலும் இவையெல்லாம், ஐ.நா. மனித உரிமை பேரவையைச் சமாளிக்கும் வாக்குறுதிகள் என்பது கடந்தகால கசப்பான அறிவிப்புகளாகும். இவ்வாறான பல அறிவிப்புகள் எதிர்காலங்களிலும் விடுக்கப்படலாம்.

நமது நாட்டில் மட்டுமன்றி, உலகளவில் பரவலாக வாழும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் மே 18ஆம் திகதி வரலாற்றில் பதிவாகியுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி யுத்தம் முடிவடைந்தது. யுத்தத்தின் கடைசி நாட்களில் உயிரிழந்த உறவுகளின் நினைவாக ஆண்டுதோறும் மே 18 தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது

2009ஆம் ஆண்டு மக்கள் யுத்தத்திலே துன்பப்பட்டு, வறுமைப்பட்டு, உணவு இல்லாமல் தவித்தனர். எத்தனையோ சிறுவர்கள், பெரியவர்கள் சொல்ல முடியாத கொடுமைக்கு ஆளானார்கள். தண்ணீரும், அரிசியும், உப்பும் மாத்திரமே அப்போது கைவசம் இருந்தன. கஞ்சி காய்ச்சி குடிப்பது மட்டும்தான் அவர்களுக்கு இருந்த ஒரே வழியாகும்.

வலிகள் நிறைந்த அந்த நேரத்தில் இந்த கஞ்சி தான் லட்சக்கணக்கான மக்களின் உயிரைக் காத்தது. அதனால்தான் இந்த கஞ்சியை ஒவ்வொரு வருடமும் மறக்க முடியாத கஞ்சியாகக் கருதப்படுகின்றது.

அந்த கஞ்சியைக்கூடக் காய்ச்சி விநியோகிப்பதற்கு பல்வேறான தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. நீதிமன்ற தடையுத்தரவுகூட பெறப்பட்டுள்ளது. எனினும், யுத்தத்தில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரக்கூடாது என்றே கடந்தகாலங்களில் தடையுத்தரவுகள் பெறப்பட்டன. அந்த நிலைமை மாறி, 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'க்கும் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

"சுகாதார முறையின் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை", கையுறைகள் அணியவில்லை", "தலைமுடி கொட்டாமல் தலைக்குக் கவசம் அணியவில்லை" என்றெல்லாம் பொதுச் சுகாதார பிரிவினரால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இவை முக்கிய குற்றச்சாடுகள் என்றாலும், கடந்தகாலங்களில் இவ்வாறான சுகாதார நடைமுறைகள் தொடர்பில் வாய் திறக்கப்படவே இல்லை என்பதுதான் வியப்பாக இருக்கின்றது.

நமது நாடு, 'ஒரே நாடு' அமுலில் இருப்பது 'ஒரே சட்டம்' என்றால், பொதுவான வைபவங்களின் போது, பொதுச் சுகாதார பிரிவினர் விழிப்பாகவே இருக்கவேண்டும்.

எனினும், பல சந்தர்ப்பங்களில், சுகாதார வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதே இல்லை என்பதே உண்மையாகும். ஆகையால், உயிரிழந்தவர்களை நினைவுகூர்தலுக்கான உரிமையைப் பாதுகாக்கவேண்டும் என்பதை நாமும் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோஷத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தைக் கோணலாக வைத்தபடி, எதனையோ இழந்தபடி இருப்பவர்களை எவர்தான் ரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழக்கையை ரசிக்கத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காவிட்டால் அதிலிருந்து மீளும் வரை சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து உலர்ந்த நிலையில் இருப்பது துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்கே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திக்காதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும்.

பழையதைத் துறந்து, புது வழி தேடுதலைச் சிரமம் எனக் கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம். செயல்படுவது மேல்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ் தேசியத்திடம் சரணடைய வைப்பது எது?

முருகானந்தம் தவம்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து புதிய கூட்டணி அமைத்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ்த் தேசிய கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய கட்சிகள் உறுதியாகவுள்ளன. சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு 50 சதவீத வாக்குகள் கிடைக்கப்பெறாமல் தடுப்பதற்கும் அதன் மூலம் தமிழர்களின் உரிமைகளுக்குப் பேரம் பேசுவதற்கும் தமிழ் பொது வேட்பாளர் அவசியம் என்ற காரணம் இந்தக் கூட்டணியால் முன்னிலைப்படுத்தப்பட்டு அது தொடர்பான கலந்துரையாடல்கள், ஆதரவு திரட்டல்கள் ஆரம்பித்துள்ளன.

இதற்கு ஆதரவாகக் கடந்த மாதம் 30ஆம் திகதி வவுனியாவில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த சிவில் சமூகங்களும் மக்கள் அமைப்புகளும் கூடி, ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்று தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாஷைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டு செயல்படுவது என்ற தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில், தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கப்படுவதனை பிரதான தமிழ்த் தேசியக் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி எதிர்க்கும் அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ளது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிட்டபோதும், புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாச, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அனுர குமார திசாநாயக்க ஆகியோரே பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களாக இருந்தனர். அப்போதும் இவர்களில் யாரை ஆதரிப்பது என்ற குழப்ப நிலை தமிழ்த் தேசியக் கட்சிகளிடையில் ஏற்பட்டிருந்ததுடன், ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அந்தத் தேர்தலிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்திருந்தது.

2019 நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்ற குழப்ப நிலையில் இருந்த தமிழ்த் தேசிய கட்சிகள், ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைக்கவென யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களால் பொது உடன்பாட்டு ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

அதில், சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இலங்கையின் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பவற்றுக்கு முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற சர்வதேசப் பொறிமுறையிலான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சர்வதேச தீர்ப்பாயம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் காணிகளிலிருந்து அரச படைகள் வெளியேற்றப் படல்வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அரச ஆதரவுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். என்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில், இந்த பொது உடன்பாட்டு ஆவணத்தை நிபந்தனையாக முன் வைத்து பேச்சுக்களை நடத்தி எந்த ஜனாதிபதி வேட்பாளர் இதனை ஏற்கின்றார்களோ அவர்களுக்கு ஆதரவளிப்பதென்ற முடிவை எடுத்த இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய 5 தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்த ஆவணத்தில் கைச்சாத்திட்டனர். இந்த பொது உடன்பாட்டு ஆவணத்தில் உள்ள விடயங்களில் ஒன்றைக்கூட சஜித், கோட்டாபய, அனுர குமார ஆகிய மூவரில் ஒருவரேனும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு நன்கு தெரிந்தும் இருந்தது. 2019 ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிட்ட நிலையில், அதில் ஒருவராக சுயேச்சை தமிழ் வேட்பாளராகக் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கட்சிகளில் ஒன்றான ரெலோவை சேர்ந்த எம்.கே.சிவாஜிலிங்கம் மட்டுமே இந்த ஆவணத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்.

ஆனால், இவருக்குத் தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென எந்தவொரு தமிழ்த் தேசிய கட்சிகளோ சிவில் அமைப்புக்களோ தமிழ் மக்களிடம் கேட்கவும் இல்லை. இவருக்கு ஆதரவாகப் பிரசாரங்களில் ஈடுபடவும் இல்லை.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தேறியது இதில் யார் வெற்றி பெறக்கூடாதெனத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்களும் எதிர்பார்த்தார்களோ அந்த ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய 69,24,255 வாக்குகளைப்பெற்று வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தார். வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட சஜித், 5,564,239 வாக்குகளைப் பெற்ற அதேவேளை, அனுர குமார 418,553 வாக்குகளைப் பெற்றார். 35 ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிட்ட இந்த தேர்தலில் தமிழ் வேட்பாளராக சுயேச்சையாகக் களமிறங்கிய எம்.கே.சிவாஜிலிங்கம் 11ஆவது இடத்தைப்பெற்று 12,256 வாக்குகளை மட்டுமே பெற்றார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் கோட்டாபய 135,058 வாக்குகளையும் சஜித் 259,673 வாக்குகளையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோட்டாபய 38,460 வாக்குகளையும் சஜித் 238,649 வாக்குகளையும் திருகோணமலை மாவட்டத்தில் கோட்டாபய 54,135 வாக்குகளையும் சஜித் 312,722 வாக்குகளையும் பெற்றனர் அதேபோன்று, வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் கோட்டாபய 23,261 வாக்குகளையும் சஜித் 259,673 வாக்குகளையும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி மாவட்டத்தில் கோட்டாபய 26,105 வாக்குகளையும் சஜித் 174,739 வாக்குகளையும் பெற்றனர். ஒட்டு மொத்தமாகக் கிழக்கு மாகாணத்தில் கோட்டாபய 227,653 வாக்குகளும் வடக்கு மாகாணத்தில் 49,366 வாக்குகளுமென 277,019 வாக்குகளைப் பெற்றார். சஜித் ஒட்டு மொத்தமாகக் கிழக்கு மாகாணத்தில் 811,044 வாக்குகளும் வடக்கு மாகாணத்தில் 434,412 வாக்குகளுமென 1,245,456 வாக்குகளையும் பெற்றார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய அனுர குமார வடக்கில் யாழில் 1,375 வாக்குகளும் வன்னியில் 1,156 வாக்குகளுமென 2,531 வாக்குகளையும் மட்டக்களப்பில் 2,304 வாக்குகளும் அம்பாறையில் 7,460 வாக்குகளும் திருகோணமலையில் 3,730 வாக்குகளையுமென 13,494 வாக்குகளையும் பெற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 13,494 வாக்குகளைப்பெற்றார்.

இதில் சுயேச்சையாகக் களமிறங்கிய தமிழ் ஜனாதிபதி வேட்பாளரான சிவாஜிலிங்கம் யாழில் 6,845 வாக்குகளையும் வன்னியில் 1,295 வாக்குகளையும் அம்பாறையில் 369 வாக்குகளையும் மட்டக்களப்பில் 800 வாக்குகளையும் திருகோணமலையில் 489 வாக்குகளையும் மட்டுமே பெற்றிருந்தார். அதாவது, கிழக்கு மாகாணத்தில் 1,658 வாக்குகளும் வடக்கு மாகாணத்தில் 8,140 வாக்குகளுமென வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 9,798 வாக்குகளைப் பெற்றார்.

ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைக் களமிறக்க வேண்டும் என முன்னெடுக்கப்படும் முஸ்தீபுகள் வரவேற்கத்தக்கது என்றாலும் இந்த விடயத்தில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் ஒரே அணியாக இருக்க வேண்டியது அவசியம் அதுமட்டுமன்றி தமிழ் பொது வேட்பாளர் யார் என்ற விடயத்திலும் குழப்பங்கள் இல்லாமல் ஏகமனதாக பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதுடன் அவ்வாறு களமிறக்கப்படும் தமிழ் பொது வேட்பாளருக்காகத் தீவிர பிரசாரங்கள், ஆதரவு திரட்டல்களிலும் ஒரே அணியாக மேடைகளில் ஏற வேண்டும். மக்களைத் தேடி வீடு வீடாகச் செல்ல வேண்டும் அவ்வாறானால் மட்டுமே தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் மக்களுக்கும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டு அவருக்கே தமது வாக்குகளை அளிப்பார்கள்.

இல்லாது விட்டால் கடந்த ஜனாதிபதி தேர்தலில் எவருடனும் கலந்துரையாடாது தன்னிச்சையாகச் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட சிவாஜிலிங்கம் , மிக சொற்பளவான வாக்குளைப் பெற்று தமிழ் மக்களுக்கு அவமானத்தைத் தேடித்தந்தது மட்டுமன்றி, தமிழர்களின் ஒற்றுமை ,தமிழ்த் தேசிய உணர்வு இந்தளவுதான் என சிங்கள வேட்பாளர்களும் சிங்கள மக்களும் தமிழர்களைப் பார்த்து எள்ளி நகையாட வைத்ததைப்போன்றதொரு நிலைமையே மீண்டும் ஏற்படும்.

எனவே, இந்த தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கும் தமிழர்களையும் அவர்களது தமிழ்த் தேசிய உணர்வையும் மேலும் கூர்மைப்படுத்த வேண்டுமே தவிர அவர்களைக் குழியில் தள்ளிவிடக்கூடாது. எனவே தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் தமிழ் மக்களும் ஓரணியில் திரளவேண்டும். அதுவே, சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களைத் தமிழ்த் தேசியத்திடம் சரணடைய வைக்கும்.

## கடிதங்கள்

### யானை வேலியினை முழுமைப்படுத்துங்கள்

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான், தட்டையமலை கிராமத்திற்குள் யானைகள் வருவதைத் தடுப்பதற்கு என அமைக்கப்பட்டு வரும் யானை வேலிகள் முழுமை பெறாததன் காரணமாக கிராம மக்கள் அசௌகரியத்திற்குள்ளாகியுள்ளனர்.

ஒட்டுசுட்டான், கமநல சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் உதவி நிறுவனம் உதவியுடன் தட்டையமலை கிராமத்தின் மூன்று பக்கங்களும் யானை வேலிகள் அமைக்கப்பட்ட போதிலும், யானைகள் வருகின்ற ஒரு பக்கம் யானை வேலி அமைக்கப்படாததன் காரணமாக யானைகள் தொடர்ச்சியாகக் கிராமத்திற்குள் வருகின்றன.

இது தொடர்பாக யானை வேலிகளை முழுமையாக அமைத்துத் தாருங்கள் என ஒட்டுசுட்டான் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விடுத்தும் யானை வேலிகள் அமைக்கப்படாது உள்ளன.

யானை வேலிகள் அமைக்கப்பட்ட போதிலும் ஒரு பக்க வேலி அமைக்கப்படாததன் காரணமாக யானைகள் வருவதனால் பயிர் அழிவுகள் ஏற்படுவதாகவும் யானை வேலியினை முழுமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தட்டையமலை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



மலையகத்திற்கொரு ரயில் பயணம்

# தண்டவாளத் தடங்கள்



எஸ்.ஏ.ஸபானா பானு,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



கண்டி ரயில் நிலையத்தில் வரிசையாகப் போடப்பட்டிருந்த ஆசனங்களினிடையே ஒருக்களித்தபடி நான் அமர்ந்திருந்தேன். இதமான காலைக் குளிர். கையில் ஒரு கோப்பைத் தேநீர். 'எல்ல' செல்லும் கனவு நனவாகப் போகின்றதென்ற ஆசை எங்களை ஆட்கொண்டிருந்தது. பற்றுச்சீட்டும் எடுத்தாயிற்று. 'தேர்ட் க்ளாஸ்' தான். சகமனிதர்களுடன் உரையாடி, உறவாடிச் செல்வதில் தான் எத்தனை பேரானந்தம்.

இனியென்ன.. ரயில் வரும் வரை காத்திருக்க வேண்டும். அப்போதுதான் ஒலிபெருக்கியில் ஓரறிவித்தல் "சீரற்றகால நிலையால் கொழும்பிலிருந்து வந்து கொண்டிருக்கும் 'உடரட்டமெனிக்கே' ரயிலானது இன்னும் அரை மணி நேரம் தாமதமாகியே கண்டி ரயில் நிலையத்தை வந்தடையும். அதுவரை பயணிகள் காத்திருக்கவும்" பெருமூச்செறித்தபடி காத்திருப்பு அந்தத் தண்டவாளத்தைப் போலவே நீண்டது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகளால் ரயில் நிலையம் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. "சீட் கிடைக்கிறது கஷ்டமாம் இடையில் யாராவது இறங்கினாத் தான் அவங்ககிட்ட இருந்து சீட்டை வாங்கி இருக்கலாம். வேறவழியில்ல" பக்கத்தில் இருந்தவர் புலம்பிக் கொண்டிருந்தார்.

ரயில் ஊழையிட்டபடி, ஒரு மாதிரியாகத் தண்டவாளங்களின் நடுவே வந்து சேர்ந்தது. நீயா நானா என்று முண்டியடித்தபடி பயணிகள் இருக்கைகளைக் கைப்பற்றவென ஓடிச் சென்று கொண்டிருந்தனர். அந்த ரகளைகளுக்கு மத்தியிலும் ஒரு வெளிநாட்டுப் பயணிகையில் கோப்ரோ (Go Pro) கேமராவுடன் அங்கு நடப்பவைகளைப் பதிவு செய்தவாறு, எதிர்ப்படும் எல்லோருடனும் பேசியபடி ஏறினார்.

> **இந்த மலைநாடும் அதன் ஒவ்வொரு அம்சமும் அழகுக்கு நிகரான அத்தனை ஆபத்துக்களைக் கொண்டவை. எவ்வளவோ உயரமான மலைத் தொடர்களையும் இந்த மக்கள் தம் குருதிதோய்ந்து தோட்டங்களாக்கி இருப்பார்கள். நானே பிரமித்துக் கொண்டேன்**

புதிய இடம்... புதியமனிதர்கள்... புதிய மொழிகள்... அவருக்கு எல்லாமே புதிதாய் தெரிந்திருக்கும் போல, இலங்கைவாசிகள் என்றாலும் எங்களுக்கும் எல்லாம் புதிதாய்த் தான் இருந்தன. பயணிக்கப் போகும் பாதை அதன் தொலைவு எப்படி இருக்கும் என்பது அனுமானக் கண்ணில் மட்டுமே ஓடிக்கொண்டிருந்தது. ரயில் மெல்லமெல்லப் புறப்பட்டது.

ஏற்கெனவே அறிந்தது போல, இருக்கை கிடைக்கவில்லை. உற்சாகமும், எப்படியாவது எல்ல இற்குச் சென்றிட வேண்டுமென்ற பேரவாவும் அதையெல்லாம் உணரவிடாமல் தடுத்தது.

எங்களைப் போல் நிறையப் பேர் இருக்கையின்றி நின்றிருந்தார்கள். என்னதான் நாம் கால்கடுக்க நின்றாலும், நம்மோடு நிற்பவர்களில் யாரோ சிலர் பெரும் பிரயத்தனப்பட்டுத்தானே பயணிப்பார்கள்.. எல்லோருக்கும் சுற்றுலாவின் இதமான மனநிலை இருக்காதல்லவா என எண்ணும் போதுமனம் அவர்களுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டது எனையறியாமலேயே.

பயணத் தேவைகள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமானவை. விடுமுறைக்காகச் சுற்றுலா செல்பவர்கள் மட்டுமல்ல, விடுமுறை நாட்களிலும் தொழிலுக்குச் செல்பவர்களை அந்த ரயில் காவிச் சென்று கொண்டிருந்தது.

நாவலப்பிட்டியில் ஒரு தம்பதி இறங்கப் போவதாகக் கூறியபோது, அந்த இருக்கைகளை எமக்குத் தரும்படி கைச்சாத்திடா ஒப்பந்தம் ஒன்றை நிறைவேற்றினோம் நட்பான புன்னகையின் சாட்சியுடன். ஓரிரு மணித்தியாலங்களின் பின்னர் 'ஹப்பாடா' என்ற அமர்ந்தபோது அருகிலொரு சகோதரி குழந்தையுடன் இருக்கையின்றி நின்றார்.

அவர்களையும் இருத்திக் கொண்டோம். இடம் போதவில்லைதான். இருப்பினும், இருக்கைகளின் நெருக்கம் எங்கள் நட்பின் நெருக்கத்தோடு, பிணைந்து விட்டிருந்தது பயண முடிவில். கொஞ்ச நேரத்திற்கு ஒரு தடவை சூடான சிற்றுண்டிப் பொட்டலங்களுடன் கூவியபடி ஒவ்வொரு ரயில் பெட்டிகளுக்குள்ளும் வந்து செல்லும் சிறு வியாபாரிகளால் பலரது பணப் பையின் கனதி குறைந்து கொண்டிருந்தது தமையறியாமலே.. மலைநாட்டின் குளிரும், மழையும் பணத்தை மெதுவாகத் தின்று கொண்டிருந்தது.

வளைவு நெளிவுகளில் ஒரு மரவட்டைபோல ரயில் ஊர்ந்து சென்றது. நேரமும் அதனுடன் இணைந்து கொண்டது. சுரங்கப் பாதைகளை அண்மிக்கும்போது கூக்குரலிடும் இளைஞர்கள், கண்கவர் தேயிலைத் தோட்டங்கள், பள்ளத்தாக்குகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள், எல்லாமே மனக்கண் முன்பு இப்போதுபோல, விரிகின்றன. இயற்கையுடன் ஒன்றித்த அழகிய ரயில் நிலையங்கள். ஒவ்வொரு நிறுத்தத்திலும் வெவ்வேறு அனுபவக் குறிப்புகள். கம்பளை, நாவலப்பிட்டி, ஹற்றன், தலவாக்கலை, நானுஓயா, ஹப்புத்தளை, பண்டாரவளை ரயில் நிலையங்களைக் கடந்து பசுமை உடுத்தியதரைத் தோற்றங்களை இரசித்தபடி நாங்கள் பயணித்தோம்.


'எல்ல'வை அண்மித்துச் செல்லச் செல்ல அங்கு இருக்கைகளுக்கான போட்டியை விடரயில் வாசல்களுக்கான போட்டி அதிகரித்தது. தமது உடலை வாகாய் வாசலுக்கு வெளியே நீட்டியபடி புகைப்படங்களை எடுப்பதில் பலர் மும்முரமாய் இருந்தனர்.

ஆசியாவின் அழகிய ரயில் பயணத்தின் நினைவுகளைப் பதிவு செய்யாவிட்டால் எப்படி? அதற்கு எமக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. வாழ்வின் ஏற்ற இறக்கங்களைப் போல, சீரற்ற காலநிலையால் ஆங்காங்கே நிலச்சரிவுகளும் மரக்கிளை முறிவுகளும் செய்திகளாக வந்தவண்ணமிருந்தன. உள்ளத்தில் பயம் ஆட்கொண்டாலும் வெளிக்காட்ட முடியவில்லை. வெயிலின் உஷ்ணத்திலிருந்தும், வாழ்வின் தீவிரங்களிலிருந்தும் கிடைத்த இதமான விடுதலையல்லவா இந்த ரயில் பயணம்.

இந்த மலைநாடும் அதன் ஒவ்வொரு அம்சமும் அழகுக்கு நிகரான அத்தனை ஆபத்துக்களைக் கொண்டவை. எவ்வளவோ உயரமான மலைத் தொடர்களையும் இந்த மக்கள் தம் குருதிதோய்ந்து தோட்டங்களாக்கி இருப்பார்கள். நானே பிரமித்துக் கொண்டேன். நானுஓயா ரயில் நிலையத்தில் வெள்ளைச் சீருடை உடுத்திய பட்டாம்பூச்சிகள் எமக்குக் கையசைத்தன. அதைப் பார்த்தவுடன் மீண்டும் பள்ளிப்பருவ ஞாபகங்கள் அந்த ரயிலைப் போல பின்னோக்கி என்னை அழைத்துச் சென்றன.

சாரளம் வழியே எத்தனை காட்சிகள். இடைக்கிடையே தூறல் மழைமேனி தொட்டது. தெமோதர நிலையத்தில் கூட்டங்கூட்டமாகப் பயணிகள் ஏறத் தொடங்கினார்கள். இலங்கையின் பிரம்மாண்டமான நைன் ஆர்ச் பிரிட்ஜ் (Nine Arch Bridge) இனை ரயிலில் பயணித்தவாறே ரசிப்பதற்காகத் தான் இத்தனை கூட்டமும். நாங்கள் 'எல்ல'இல் இறங்கும் போதுமாலை ஆறு மணிகடந்திருந்தது. இருளில் சிறு ஒளி போல எதிர்பார்ப்புக்களுடன் விடுதியறை நோக்கிச் சென்றோம்.





# பார்த்ததும் காதலா?



சமர் சமரன்

காலை ஆறுமணி இருக்கும் கரன் தன் நண்பர்களுடன் சுற்றுலா செல்ல ஆயத்தமாகி கொண்டிருந்தான். தனியார் பேருந்து ஒன்றில் ஒருநாள் சுற்றுலா அது. பேருந்தில் ஏறிய பொழுது தொடங்கி ஒரே ஆட்டமும் பாட்டமும் தான். கரனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் கரனுக்கு மிக நெருக்கமானவர்கள்.

அவர்களுடன் அடிக்கடி பேசிக் கொண்டே பயணம் மேற்கொண்டிருந்தான். பேருந்தில் பெண் நண்பர்களும் இருந்தார்கள். எனினும், அவர்களுடன் பேசுவதற்கும் பழகுவதற்கும் கரன் தயக்கம் காட்டினான். இப்படியே சுமார் நான்கு மணி நேர பயணத்தின் பின்னர், தாவரவியல் பூங்காவை அடைந்தார்கள். அது மிகவும் பிரபலமான அரச பூங்காவாகும்.

நுழைவாயிலில் அனுமதிச்சீட்டை பெற்றவுடன் பேருந்தில் வந்த அனைவரும் ஆளுக்கொரு திசையில் தமக்கு பிடித்தமான நண்பர்களுடன் பூங்காவை சுற்றிப் பார்க்க சென்றனர்.

கரன் தனது நண்பர்களுடன் பூங்காவின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். அன்று விடுமுறை தினம் என்பதால் சனக்கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது. நிறைய பாடசாலை சிறுவர்கள் வெள்ளைப் புறாக்கள் போல் பசும்புற்றறைகளிலேயே அங்குமிங்கும் ஓடித்திரிந்தனர். அவர்களுக்கு பொறுப்பாக வந்திருந்த ஆசிரியர்கள் இருவர், மூவராகக்கூடி பேசிக்கொண்டே பிள்ளைகளையும் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் வயதானவர்கள் மற்றும் குடும்பத்தினர் என பல்வேறுபட்ட மக்களும் பூங்காவிலே நிரம்பியிருந்தார்கள். இதையெல்லாம் கண்டவர்களாக கரனும் அவனது நண்பர்களும் ஒரு மரநிழலிலே காலை வெயிலுக்காக ஒதுங்கி நின்று பேசிக்கொண்டிருக்கும் போது, அங்கே கண்ட காட்சியில் கரனின் கண்கள் அகல விரிந்தன. ஆம், அங்கு வெண்மை நிற உடையுடன் அழகான தோற்றமுடைய ஒரு யுவதியை கண்டான்.

முன்னொரு பொழுதும் அவன் பார்க்காத முகம் அது. அப்படியே லயித்துப் போய் நின்றான். கரனின் முக மாற்றத்தை கண்டுகொண்ட அவனது நண்பர்களில் ஒருவனான விமல், "மச்சான், என்னடா உன் முகம் இப்படி மாறி இருக்கு. அந்த புள்ளைய பார்த்துட்டான் போலையே" என்றான். "ஓம் டா அவன் பொம்பளைப் புள்ளைகள கண்டாலே பேசுறதுக்கு பயப்படுவான் இப்போ என்ன ஆச்சு ம்ம்ம்... நடக்கட்டும்... நடக்கட்டும்..." என்று பிரியன் கூறினான். கரன் மனதில் இனம்புரியாத எண்ணங்கள் அலை மோதின.

அந்த யுவதி தனது குடும்பத்தினருடன் பூங்காவை பார்ப்பதற்கு வந்திருப்பாள் போலும் அவளும் இடையிடையே குடும்பத்தினருடன் பேசிக்கொண்டே கரனைப் பார்த்துக் கொண்டாள். அவளின் பேச்சு, அணிந்திருந்த உடை, என்பன அவள் சகோதர மொழியைப் பேசுகின்றவரகள் என புரிந்தது. இருந்தாலும் இங்கு காதல் என்று வரும் போது மொழி என்ன? இனம் என்ன? எதுவுமே தடையாக வருவதில்லை. மனம் மட்டுமே இங்கே பிரதானம்.

பார்த்தவுடன் காதல் என்றெல்லாம் அடிக்கடி நாம் தமிழ் திரைப்படங்களில் பேசுவதை கேட்டிருக்கிறோம். அதுபோலதான், இந்த காதலுக்கும் காரணம் சொல்லலாம். இனி என்ன? தலைவன் தன் காதலை சொல்லிட தலைவி எவ்வாறு ஏற்பாள். என்றெல்லாம் நாம் சொல்லித்தான் தெரியவேண்டுமா! எது எப்படியோ இங்கு இரு மேகங்கள் காதல் மழையை பொழிய மனதால் சூழ்ந்து கொண்டன. யுவதியின் குடும்பத்தினர் மதிய நேரம் ஆகும் போது தாம் கொண்டு வந்திருந்த உணவுப் பொதிகளை பிரித்து உண்ணும் வேளையில் கரனுக்கும் அவன் நண்பர்களுக்கும் பசி என்ற உணர்வே வந்தது.

அருகிலிருந்த சிற்றுண்டிச்சாலையில் மதிய உணவை முடித்துக்கொண்டனர். கரன், தான் என்ன சாப்பாடு சாப்பிட்டோம் என்பதைக்கூட அறியாதவனாய் சாப்பிட்டான். சாப்பிட்டவுடன் மீண்டும் நண்பர்களுடன் நேராக அந்த யுவதி இருந்த இடத்திற்கு அருகே வந்து நின்றான்.

நிமிடங்கள் நகர்கின்றதே தவிர அவர்களின் மனங்களோ நகரவே இல்லை. பார்வைகள் மட்டுமே இங்கு நிகழ்ந்தன.

பூங்காவிலே பலவித மரங்கள், விசேட மரங்கள், அழகான மரங்கள்ருபவ் மூலிகை மரங்கள் என பல்வேறு பகுதிகள் இருந்தன. அவற்றை பார்த்த வண்ணம் குறித்த யுவதியின் குடும்பத்தினர் ஒவ்வொன்றாக கடந்து சென்றனர். கரனின் பார்வையோ யுவதியில் மட்டுமே இருந்தது. அந்த யுவதியின் பார்வை கரனிலும் அதே சமயம் தன் பெற்றோர் மீதும் இருந்தது.

கரனின் நண்பர்களின் பார்வையோ யுவதியின் குடும்பத்தினர் மீதும் கரனின் மீதும், சில சமயம் பூங்காவின் அழகிலும் இருந்தது. இவ்வாறு பார்வைகளில் பல்வேறு கோணங்கள். கரனிடம் உள்ள அன்பை அந்த யுவதி புரிந்து கொண்டாளோ, என்னவோ இடையிடையே புன்னகையும் அவளிடமிருந்து பூவாக உதிர்ந்து கொண்டிருந்தது. அத்தருணங்களில் கரனின் உள்ளம் பூரித்தது.

நண்பர்களின் நச்சரிப்பு கரனின் காதுகளில் அடிக்கடி விழுந்தது. "கொஞ்சம் பொறு மச்சான், எனக்கு எப்படி சொல்றது என்டு தெரியல, பயமா இருக்கு" என்றான் கரன். ஆனால், நண்பர்களோ விட்டபாடில்லை.எப்படியாவது யுவதியிடம் பேசி தொலைபேசி இலக்கத்தையாவது பெற்று விடுமாறு கூறினார்கள். இப்படியே நேரம் சென்று கொண்டிருந்தது.

இன்றைய சுற்றுலா பூங்காவிலே முடிந்து விட்டது என்று தான் சொல்லவேண்டும். மணி ஐந்தாகி விட்டது. எல்லோரும் பேருந்து நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திற்கு செல்வதற்காக கரனையும் அவரது நண்பர்களையும் அழைத்தார்கள்.

கரனுக்கு பயமும் பதற்றமும் அதிகரித்தது, இதயம் படபடத்தது, யுவதியை பின் தொடர்ந்து அன்றைய நாளும் கடந்து கொண்டிருந்தது. ஒருவாறாக நுழைவாயில் ஊடாக யுவதியின் குடும்பமும் வீட்டிற்கு செல்ல விரைந்தனர். அச்சமயம் தெருவோரம் இருந்த கடையில் பழங்களை வாங்குவதற்காக யுவதி தனியே சென்றாள்.

> **அவன் மனம் ஏமாற்றம் என்ற புயலால் தாக்கப்பட்டது போல, பேருந்து ஆசனத்தில் சரிந்து விழுந்தான். ஜன்னல் வழியே தலையை நீட்டிக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்**

சந்தர்ப்பத்தை தவற விடாத கரனும் அவள் பின்னே சென்று தைரியத்தை மனதிலே வரவழைத்துக் கொண்டு சைகையில் தொலைபேசி எண்ணை கேட்டான். அதேநேரம், தனது பேருந்து சாரதி வாகனத்தின் ஒலி மூலம் அனைவரையும் அழைத்ததை உணர்ந்த கரன், ஏமாற்றத்துடன் நண்பர்களுடன் பேருந்தில் ஏறிக் கொண்டான்.

அவன் மனம் ஏமாற்றம் என்ற புயலால் தாக்கப்பட்டது போல, பேருந்து ஆசனத்தில் சரிந்து விழுந்தான். ஜன்னல் வழியே தலையை நீட்டிக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். அச்சமயம் ஒரு பேருந்து பின்நோக்கிய வண்ணம் கரனிருந்த பேருந்தின் அருகே நகர்ந்து வந்து தரித்து நின்றது. அந்த பேருந்தின் ஜன்னல் ஓரத்தில் கரனையே பார்த்த வண்ணம் ஒரு முகம் ஆம்! அந்த முகம் பூங்காவில் கண்ட முகம், அவள் கண்ணில் ஏதோ ஒரு ஏக்கம் யுவதியின் கையில் சிறிய கடதாசி துண்டு இருந்தது.

அது என்னவென்று பார்ப்பதற்குள் அவள் இருந்த பேருந்து நகரத் தொடங்கியது. கரனின் நெஞ்சம் துடித்தது. தன் கையிலிருந்த கடதாசி துண்டை கசக்கி ஜன்னல் வழியே வெளியே தூக்கி எறிந்தாள். பின் சைகையால் அந்த துண்டினை அவனிடம் காட்டினாள். அடுத்த கணம் அவளின் பேருந்து விரைந்தது.

கரன் தன் இருக்கையிலிருந்து விரைந்து எழுந்து, பேருந்திலிருந்து இறங்கி ஓடினான். அந்த கடதாசி துண்டை எடுத்து விரித்துப் பார்த்தான் என்ன! ஆச்சரியம் அதிலே பெயரும், தொலைபேசி எண்ணும் இருந்தது.

மீண்டும் பேருந்திலிருந்து ஒலியும், நண்பர்களின் உரத்த குரலினாலான அழைப்பினையும் காதில் வாங்கி கொண்டவனாய் பேருந்தில் வந்து மீண்டும் ஏறிக்கொண்டான். அவர்களின் பேருந்தும் பயணத்தை தொடர்ந்தது. கரனோ அந்த கடதாசியில் துண்டை பத்திரமாக எடுத்து தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டான்...

கொல்கத்தா

அமெரிக்காவின் எச்சரிக்கைக்கு

# இந்தியா பதில்

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே நடைபெற்று வரும் போர் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகின்ற சூழ்நிலையில், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தக்கூடாது என்றும், மீறி நடத்தினால் விளைவுகள் மோசமாக இருக்கும் எனவும் அமெரிக்கா, ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி ஈரான் தாக்குதல் நடத்தியதற்காக அமெரிக்கா, ஈரான் மீது பொருளாதாரத் தடையை அறிவித்தது. இதனைத் தொடர்ந்து, ஈரான் இராணுவத்துடன் வர்த்தகம் செய்ததாகக் கூறி இந்தியாவைச் சேர்ந்த 3 நிறுவனங்கள் உட்பட 10க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது.

இந்த நிலையில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் இதுதொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், “ஈரானிய முடிவில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன. அதாவது கூட்டு முயற்சி பங்குதாரர் மாற்றங்கள், நிபந்தனைகள் போன்றவை. இறுதியாக, எங்களால் இதை நீண்ட கால ஒப்பந்தத்தை செய்து கொள்ள முடிந்தது. ஒப்பந்தம் அவசியம். ஏனெனில் அது இல்லாமல், துறைமுக செயல்பாட்டை மேம்படுத்த முடியாது. அதன் செயல்பாடு, முழு



பிராந்தியத்திற்கும் பயனளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அமெரிக்கா சொல்லப்பட்ட சில கருத்துகளை நான் பார்த்தேன். ஆனால், இது உண்மையில் அனைவரின் நலனுக்கானது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வைப்பது போன்ற ஒரு கேள்வி என நினைக்கிறேன். மக்கள் இதை குறுகிய கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடாது. சபாஹர் மீதான அமெரிக்காவின் சொந்த அணுகுமுறையைப் பார்த்தால், சபாஹருக்கு அதிக முக்கியத்துவம் இருப்பதாக அமெரிக்கா நினைப்பதாகத் தெரிகிறது” என்று பதில் அளித்தார்.

விழுப்புரம்

குடிநீர் கிணற்றில் மனிதக்

## கழிவு கலந்ததாக புகார்



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள கஞ்சனூர் அருகே உள்ள கே.ஆர். பாளையம் திறந்தவெளி கிணற்றில் மனித கழிவு கலக்கப்பட்டதாக கிராம மக்கள் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இந்த கிணற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீர், அந்த கிராமத்தில் வசிக்கும் 100க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மோட்டார் மூலம் விநியோகிப்படுகிறது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த புகார் குறித்து விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை மேற்கொண்டனர். மேலும் கிணற்றின் தடுப்பு சுவரின் மீது ஏறி அமர்ந்து மர்ம நபர்கள் கிணற்றில் மனித கழிவை கலந்ததாக குற்றம் சாட்டப்படுகிறது.

இச்சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மயிலாடுதுறை

தீக்குளித்த காதலியை

## காப்பாற்ற முயன்ற காதலன் உயிரிழப்பு

காதலர்களான இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக, தீக்குளித்த காதலியை காப்பாற்ற முயன்ற காதலன் உயிரிழந்துள்ளார்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த குறித்த கல்லூரி மாணவனும், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவியும் காதலித்து வந்த நிலையில், அவர்கள் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, மாணவி, மறைத்து வைத்திருந்த பெற்றோலை, தனது உடலில் ஊற்றி தீ வைத்துக் கொண்டுள்ளார். இதனை பார்த்த மாணவன், அவரைக் காப்பாற்ற முயலுகையில், இருவர் மீதும் தீ பற்றி எரியத் தொடங்கியது. இதையடுத்து உடல் முழுவதும் தீக்காயங்களுடன் உயிருக்கு போராடிய அவர்களை, அங்கிருந்து மீட்ட அக்கம்பக்கத்தினர், சிகிச்சைக்காக அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்

இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், திருவாரூரில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் பரிதாபமாக உயிரிழந்தார்.

புளோரிடா

புளோரிடாவில் பேருந்து விபத்து:


## 8 பேர் பலி

அமெரிக்காவின் மத்திய புளோரிடாவில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புளோரிடா பகுதியில் விவசாயத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தே, இவ்வாறு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குறித்த பேருந்தில் பயணித்த சுமார் 40 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை, பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



பிரான்ஸ்

சிறைச்சாலை வாகனம் மீது தாக்குதல்

## 2 சிறை அதிகாரிகள் பலி




பிரான்ஸில் சிறைச்சாலை வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்துள்ள நிலையில், மூன்று சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

இதன்போது நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருந்த கைதி தப்பியோடியுள்ளார்.

பிரான்ஸின் நோமன்டியின் ருவன் என்ற நகரில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தினை தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், தாக்குதலை மேற்கொண்டோர் பற்றிய தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காஸா

துப்பாக்கிச் சூட்டில்

## இந்திய அதிகாரி பலி

காசாவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐ.நா. பாதுகாப்பு குழுவில் பணியாற்றி வந்த, இந்திய அதிகாரி வைபவ் அணில் காலே உயிரிழந்துள்ளார்.

2022இல் இந்திய இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற வைபவ், ஐ.நா. பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அதிகாரியாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அவர் ராஃபா நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றுக்கு சென்று கொண்டிருந்தபோது, அங்கு திடீரென இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகியுள்ளார்.



ஜோர்ஜியா

## ஜோர்ஜியா பாராளுமன்றில் கைகலப்பு

ஜோர்ஜியா பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது எம்.பிக்கள் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஜோர்ஜியாவில் பெரும் சர்ச்சையை வித்திட்டுள்ள வெளிநாட்டு முகவர் சட்ட மசோதா, அந்த நாட்டு பாராளுமன்றத்திலும் கைகலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் சட்டம் என்று விமர்சிக்கப்படும் இந்த மசோதா மீதான விவாதத்தின் போது, எதிர்க்கட்சி எம்.பிக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் பாராளுமன்றத்தில் தள்ளு முள்ளு ஏற்பட்டுள்ளது.

ஜோர்ஜியாவில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக வெளிநாட்டு முகவர் சட்ட மசோதாவை நிறைவேற்ற அந்த நாட்டின் ஆளும் கட்சியான ஜோர்ஜியன் ட்ரீம் பார்ட்டி முயன்று வருகிறது. இந்நிலையில், ஜோர்ஜியாவில் வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படும் ஊடகங்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உள்நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன என்பது, ஆளும் கட்சியின் குற்றச்சாட்டு. ஆனால் ரஷ்யாவை போன்று ஜனநாயகத்தின் குரல்வளையை நெறிக்கவும், மனித உரிமை அமைப்புகளை இலக்கு வைக்கவுமே இந்த சட்டம் இயற்றப்படுவதாக குற்றஞ்சாட்டி நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்: லக்னோவை வென்ற டெல்லி

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் செவ்வாய்க்கிழமை(14) இரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் உடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோவின் அணித்தலைவர் லோகேஷ் ராகுல், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி, ஜேக் பிறேஸர்-மக்குர்க்கை ஆரம்பத்திலேயே அர்ஷாட் கானிடம் இழந்தது. எனினும் அபிஷேக் பொரேலும், ஷே ஹோப்பும் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹோப் 38 (27), பொரேல் 58 (33) ஆகியோர் குறிப்பிட்ட இடைவெளிகளில் ரவி பிஷ்னோய், நவீன்-உல்-ஹக்கிடம் இழந்தது.

பின்னர் அணித்தலைவர் றிஷப் பண்டும் 33 (23) ஓட்டங்களுடன் நவீனிடம் வீழ்ந்தபோதும், ட்ரிடான் ஸ்டப்ஸின் அதிரடியான ஆட்டமிழக்காத 57 (25) 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 209 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லக்னோ,




ஆரம்பத்திலேயே ராகுல், குயின்டன் டி கொக்கை பொரேலுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் வீரராகக் களமிறங்கிய இஷாந்த் ஷர்மாவிடம் இழந்ததோடு, மார்க்கஸ் ஸ்டொய்னிஸை அக்ஸர் பட்டேலிடம் இழந்தது.

அடுத்து வந்த நிக்கலஸ் பூரான் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடியபோதும் தீபக் ஹூடா, மொஷின் கானுக்குப் பதிலாக மாற்றுவீரராகக் களமிறங்கிய ஆயுஷ் படோனி ஆகியோர் இஷாந்த், ஸ்டப்ஸிடம் வீழ்ந்தனர். 61 (27) ஓட்டங்களுடன் முகேஷ் குமாரிடம் பூரான் வீழ்ந்ததோடு, குல்தீப் யாதவ்விடம் சிறிது நேரத்தில் குருனால் பாண்டியா வீழ்ந்தார்.

அர்ஷாட் கான் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 58 (33) ஓட்டங்களைப் பெற்றபோதும் கலீல் அஹ்மட்டிடம் யுட்விர் சிங் வீழ்ந்ததோடு, ரவி பிஷ்னோய் ரண் அவுட்டாக 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 189 ஓட்டங்களையே பெற்ற லக்னோ 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக இஷாந்த் தெரிவானார்.

இந்நிலையில் ஹைதரபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் டைட்டான்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்ளவுள்ளது.

## ஐ.பி.எல்: தகுதிகாண் போட்டிகளில் ராஜஸ்தான் றோயல்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.) தகுதிகாண் போட்டிகளுக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் தகுதி பெற்றுள்ளது.

லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியை டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றமையைத் தொடர்ந்தே தற்போது, 12 போட்டிகளில் விளையாடி 16 புள்ளிகளைப் பெற்றுள்ள ராஜஸ்தான் அடுத்த இரண்டு போட்டிகளில் தோற்றாலும் முதல் நான்கிடங்களை விட்டு கீழிறங்காது என்பது குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை மாவட்ட கால்பந்தாட்டத் தொடர்:

## சம்பியனான தம்பலகாமம் பிரதேச செயலக அணி

ஹஸ்பர் ஏ.எச்.

திருகோணமலை மாவட்ட மட்ட கால்பந்தாட்டத் தொடரில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணி சம்பியனானது.

மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலப் பகுதிகளை உள்ளடக்கிய அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் திருகோணமலை பிரதேச செயலக அணியுடனான இறுதிப் போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஐந்தாண்டுகளின் பின்னர் மாவட்ட மட்டப் போட்டிகளில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணி சம்பியனானது.

அந்தவகையில், கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலக அணி கலந்துகொள்ளவுள்ளது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வென்ற சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் புதன்கிழமை (15) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.


சிற்றி சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் எர்லிங் ஹலான்ட் பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 88 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் சிற்றி உள்ளது. 86 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனல் உள்ளதுடன், 79 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லிவர்பூலும், 68 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன.



அயர்லாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றியது பாகிஸ்தான்



அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை அயர்லாந்தும், இரண்டாவது போட்டியை பாகிஸ்தானும் வென்றிருந்த நிலையில், டப்ளினில் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற மூன்றாவது போட்டியை பாகிஸ்தான் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

அயர்லாந்து: 178/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: லொர்கன் டக்கர் 73 (41), அன்டி போல்பிரயன் 35 (26), ஹரி டெக்டர் ஆ.இ 30 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 3/14 [4], இமாட் வசீம் 1/23 [3], மொஹமட் ஆமிர் 1/32 [4])

பாகிஸ்தான்: 181/4 (17 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 75 (42), மொஹமட் றிஸ்வான் 56 (38) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 3/28 [4], ஜோர்ஜ் டொக்ரல் 0/5 [1])

போட்டியின் நாயகன்: ஷகீன் ஷா அஃப்ரிடி

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 16, மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.